செய்தி வெளியீடு எண் :2310 நாள் : 20.12.2022

**<u>செய்தி வெளியீடு</u>**

# 50,000 புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்குவது குறித்து மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.வி செந்தில் பாலாஜி அவர்கள் தலைமையில் சிறப்பு ஆய்வு கூட்டம் .

இன்று (20.12.2022) சென்னை, தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.வி செந்தில் பாலாஜி அவர்கள் தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் நடப்பாண்டில் 50,000 விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குவது குறித்து தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக தலைமையகத்தில் சிறப்பு ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

இக்கூட்டத்தில் அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள், அனைத்து மின் பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் காணொளி காட்சி வாயிலாக கலந்து கொண்டனர், இந்த ஆய்வுக் கூட்டத்தின் போது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர் திரு.ரா.மணிவண்ணன், இயக்குநர்/பகிர்மானம் திரு.மா.சிவலிங்கராஜன் மற்றும் தலைமை அலுவலக தலைமைப் பொறியாளர்கள், உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டில் விவசாய உற்பத்தியினை பெருக்கவும், விளை நிலங்களின் பரப்பை அதிகரிக்கவும் மற்றும் விவசாயிகளின் நலனை மேம்படுத்தும் நோக்குடனும் 2022-2023 ஆம் ஆண்டில் 50,000 எண்ணிகையிலான புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்கப்படும்

என்று எரிசக்தித் துறை மானிய கோரிக்கையில் தமிழக சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டது.

விவசாயிகளிடம் பெரும் வரவேற்பைப் பெற்ற இத்திட்டமானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.11.2022 அன்று கரூர் மாவட்டம், அரவக்குறிச்சியில் தொடங்கி வைக்கப்பட்டது. தொடங்கி வைக்கப்பட்ட அன்றே 20,000 விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கான ஆணையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

விழாவில் அறிவித்தபடி, இந்த திட்டம் தொடங்கப்பட்ட 11.11.2022 முதல் 100 நாட்களுக்குள் முழுவதுமாக முடிக்கப்பட்டு 50,000 விவசாயிகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும். இன்று வரை 34,134 விவசாயிகளுக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இன்னும், 15,866 விவசாயிகளுக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட வேண்டும்.

சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்களும் இந்த வருடம் மீதமுள்ள 15,866 விவசாய மின் இணைப்புகளை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டு, பணிகள் அனைத்தையும் முடித்து எல்லா விவசாய மின் இணைப்புகளும் வெகு விரைவில் வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

அனைத்து பொறியாளர்களும் தமக்கான இலக்கினை நிர்ணயித்துக் கொண்டு அது நிறைவேற்றப்படுகிறதா என தொடர்ந்து ஆய்வுக் கூட்டம் நடத்தி அதனை உறுதிப்படுத்த வேண்டும். இதற்கான கலந்தாய்வு கூட்டம் பிரிவு அலுவலக நிலையில் நடத்தப்பட்டு கண்காணிக்கப்பட வேண்டும்.

விவசாய மின் இணைப்புகள் ஒழுங்கான முறையில் விவசாயிகளுக்குத்தான் வழங்கப்படுகின்றதா என்பதை சம்பந்தப்பட்ட மேற்பார்வை பொறியாளர்களும், மண்டல தலைமைப் பொறியாளர்களும் கண்காணிக்க வேண்டும். முன்னுரிமை பதிவில் ஏதேனும் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டாலோ அல்லது விவசாயிகளை இடையூறு செய்வதாக புகார்கள் ஏதேனும் கிடைக்கப் பெற்றாலோ உரிய அலுவலர் மீது துறை ரீதியாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். அனைத்து பணிகளும் வாரிய செலவிலேயே முடிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுறுத்தினார்.

**பின்னர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,**

**அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின் இணைப்பு வழங்கப்படும் என்ற இந்த அரசின் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றக்கூடிய வகையில் தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற முதல் ஆண்டிலேயே ஒரு லட்சம் விவசாயிகளுக்கான மின் இணைப்பு வழங்கக்கூடிய சிறப்பு வாய்ந்த திட்டத்தை தங்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைத்து, ஒரு இலட்சமாவது மின் இணைப்புக்கான உத்தரவினையும் வழங்கினார்கள். பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்த விவசாயிகளின் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி தந்திருக்கின்றார்கள். அதேபோல, இந்த ஆண்டு 50,000 விவசாயிகளுக்கான மின் இணைப்பு வழங்கப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டு கடந்த 11.11.2022 அன்று கரூர் மாவட்டம் அரவக்குறிச்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 20,000**

விவசாயிகளுக்கான மின் இணைப்பு வழங்குவதற்கான உத்தரவு வழங்கப்பட்டது. கடந்த நவம்பர் 11ஆம் தேதி தொடங்கிய மின் இணைப்பு வழங்கக்கூடிய பணிகள் மிக விரைவாக ஒட்டுமொத்தமாக மின்வாரியத்தினுடைய அனைத்து உயர் அலுவலர்கள் முதல் கடைநிலை பணியாளர்கள் வரை மிகச் சிறப்பாக செயல்பட்டு இதுவரை 34,134 விவசாயிகளுக்கான மின் இணைப்புகள் வழங்கி முடிக்கப்பட்டுள்ளது. மீதம் இருக்கக்கூடிய 15,866 விவசாயிகளுக்கு வருகின்ற ஜனவரி பொங்கல் திருநாளுக்கு முன்பாகவே முழுவதுமாக 50,000 விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கக்கூடிய பணிகளை சிறப்பாக முடிக்கக்கூடிய வகையில் இன்று ஆய்வு கூட்டம் நடந்து முடிந்திருக்கின்றது.

இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான தேவையான அளவிற்கு தளவாட பொருட்கள் கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளது. மின் இணைப்பு எண்ணோடு, ஆதார் எண்ணை இணைப்பதற்கான இந்த சிறப்பு வாய்ந்த முயற்சி மின்சார வாரியத்தின் மூலமாக எடுக்கப்பட்டு மொத்தம் 2 கோடியே 67 லட்சம் மின் நுகர்வோர்களுக்கு ஆதார் எண்ணை இணைக்கக்கூடிய அந்த பணிகள் தொடங்கப்பட்டது. நேற்று வரை ஒரு கோடியே 20 லட்சம் பேர் மின் இணைப்பு எண்ணை, ஆதார் எண்ணுடன் இணைத்துள்ளனர். அதேபோல, ஆன்லைன் மூலமாக 58 இலட்சம் பேர் பதிவு செய்துள்ளனர், பிரிவு அலுவலகம் உள்ளிட்ட சிறப்பு முகாம்கள் இரண்டையும் சேர்த்து 61 இலட்சம் பேர், ஆக மொத்தம் 1 கோடியே 20 இலட்சம் மின் இணைப்புகள் ஆதாருடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. மீதம் உள்ள மின் இணைப்புகளை ஆதாருடன் இணைக்கக்கூடிய பணிகளை இந்த மாத இறுதிக்குள் விரைவாக முடித்துக் கொள்ளுமாறு உங்கள் வாயிலாக மின் நுகர்வோர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

மின் கட்டண உயர்வால் வருவாய் உயர்வு வருடத்திற்கு 19,000 கோடி வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், படிப்படியாக சிறு, குறு தொழில் நிறுவனங்கள், கைத்தறி, விசைத்தறி ஆகியவற்றிக்கு மற்றும் சில பிரிவுகளில் மின் கட்டணம் குறைக்கப்பட்டதால் சராசரியாக மாதம் 1,000 கோடி அளவிற்கு தான் கூடுதலாக வருவாய் வந்துக்கொண்டிருக்கிறது. மாண்டஸ் புயலால் மின் வாரியத்திற்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்து தரவுகள் சேகரிக்கப்பட்டு முழுவதும் கிடைத்தவுடன் அது பற்றிய தகவல்கள் தெரியவரும். ஸ்மார்ட் மீட்டர் மற்றும் மின் மாற்றி (DT) மீட்டர் பொறுத்தும் பணிக்கான டெண்டர் ஆயத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த பணிகள் விரைவில் தொடங்கப்பட்டு தேர்தல் வாக்குறுதியின்படி மாதம் ஒரு முறை மின் கணக்கீடு செய்யும் முறை செயல்படுத்தப்படும். மின் வாரியத்தைப் பொறுத்தவரை தேர்தல் வாக்குறுதியில் 20,000 மெகாவாட் அளவிற்கு கூடுதலாக மின் உற்பத்தி செய்வதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. அதில் 6,000 மெகாவாட் சோலார், 5,000 மெகாவாட் காற்றாலை, 3,000 மெகாவாட் எரிவாயு, 2,000 மெகாவாட் மின் சேமிப்புத்திறன் மற்றும் மீதம் அனல் மின் நிலையத்தில் இருக்கக்கூடிய 6,000 மெகாவாட் மின் உற்பத்திக்கான நிறைவு பெறாத பணிகளும் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மின் வாரியம் தொடங்கிய நாளில் இருந்து 2021 வரை தமிழ்நாடு மின் வாரியத்தின் சொந்த நிறுவு திறன், தனியார் உட்பட 32,500 மெகாவாட் மட்டுமே தமிழகத்தின் மொத்த நிறுவு திறனாக உள்ளது. அடுத்தப் பத்தாண்டுக்குள் அதாவது, 2030க்குள் மொத்த நிறுவு திறன் தற்போது இருப்பதை விட இரு மடங்காக அதாவது 65,000 மெகாவாட்டாக உயர்த்துவதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டில் 7 கோடி ரூபாய்க்கு சாம்பல் மூலம் வருமானம் வந்தது. ஆனால் தற்போது, 13.71 கோடி வருமானம் கிடைத்திருக்கிறது. வருமானம் இரட்டிப்பு

ஆக்கப்பட்டிருக்கிறது. மேலும், 6,600 கோடி ரூபாய்க்கு ஆர்.இ.சி–யில் வாங்கின கடனிற்கு 13 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக வட்டி குறைக்கப்பட்டிருக்கிறது. ஒரு வருடத்திற்கு 84 கோடி அளவிற்கு வட்டி கட்டுவதிலிருந்து செலவு குறைக்கப்பட்டுள்ளது. இப்படி மின்சார வாரியத்தின் ஒவ்வொரு பிரிவையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கண்காணித்து எந்தெந்த செலவீனங்கள் கூடுதலாக இருந்தது, அவற்றில் எவை எவைகளை சீரமைக்கலாம், எந்தெந்த வகைகளில் வருவாயைப் கூடுதலாக்கலாம் என உத்தரவிட்டதை கவனத்தில் கொண்டுதான் மின் வாரியத்தை மேம்படுத்தக்கூடிய சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, இதன் மூலம் மூன்று ஆண்டுகளுக்குள் நமக்கு வரக்கூடிய வருவாயும், செலவீனங்ககளும் உள்ள இடைவெளி நிச்சயமாக குறைக்கப்படும் என்று தெரிவித்தார்.

பின்னர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வரும் 24 மணி நேர நுகர்வோர் மின் சேவை மையமான மின்னகத்தை ஆய்வு செய்தார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in